அன்புடையீர் அஸ்ஸலாமு அலைக்கும்.

# 'அக்கறையுள்ள' என்ற பெயரில் அநாமதேயம் எழுதிய அனந்தரக்காரருக்கு ஆணித்தரமாகப் பதில் தரும் அல்ஹாஜ் அலியார் முஸம்மில்

## *வாசித்து, கிரகித்துப் பாருங்கள்*

*பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.*
*அல்ஹம்துலில்லாஹிரப்பில் ஆலமீன்*

எவன் ஒரு தவறையோ அல்லது பாவத்தையோ சம்பாதித்து விட்டு அப்பால் அதனை ஒரு நிரபராதி மீது வீசி வீடுகிறானோ அவன் நிச்சயமாக அவதூற்றையும், பகிரங்கமான பாவத்தையும் சுமந்து கொள்ளுகின்றான் (அல் குர்ஆன் 4 : 112)

மு:.மின்களே, (சந்தேகமான) பல எண்ணங்களில் இருந்து விலகிக் கொள்ளுங்கள். ஏனெனில் நிச்சயமாக எண்ணங்களில் சில பாவங்களாக இருக்கும். (பிறர் குறைகளை) நீங்கள் துருவித் துருவி ஆராய்ந்து கொண்டிராதீர்கள். அன்றியும் உங்களிற் சிலர் சிலரைப் பற்றி புறம் பேச வேண்டாம். உங்களில் எவராவது தம்முடைய இறந்த சகோதரனின் மாமிசத்தைப் புசிக்க விரும்புவாரா?(இல்லை) அதனை நீங்கள் வெறுப்பீர்கள். இன்னும் நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். நிச்சயமாக பாவத்தில் இருந்து மீளுவதை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளுபவன். மிக்க கிருபை செய்பவன். (அல்குர்ஆன் 49 : 12)

நபியே, தங்களைத் தாங்களே பரிசுத்தவான்கள் என்று கூறிக் கொள்பவர்களை நீர் பார்க்க வில்லையா?(அவர்கள்) கூறுவதுபோல் அல்ல, அல்லாஹ், தான் நாடியவர்களைப் பரிசுத்தமாக்குகின்றான். (இது விஷயத்தில்) எவரும் ஓர் அணுவளவும் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள். (அல்குர்ஆன் 4 : 49)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வின் மஸ்ஜிதைப் பரிபாலனம் செய்யக் கூடியவர்கள் அல்லாஹ்வின் மீதும் இறுதி நாள் மீதும் ஈமான் கொண்டு தொழுகையைக் கடைப் பிடித்து சக்காத்தை முறையாகக் கொடுத்து அல்லாஹ்வைத் தவிர வேறெதற்கும் அஞ்சாதவர்கள் தாம் நிச்சயமாக நேர்வழி பெற்றவர்களில் ஆவார்கள். (அல்குர்ஆன் 9 : 18)

மு:.மின்களே , எந்த ஒரு கூட்டத்தினரும், மற்றொரு கூட்டத்தினரைப் பரிகாசம் செய்ய வேண்டாம் இவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக் கூடும். எந்தப் பெண்ணும் மற்றப் பெண்ணை பரிகாசம் செய்ய வேண்டாம். இவர்களை விட அவர்கள் சிறந்தவர்களாக இருக்கக்கூடும். இன்னும் உங்களிடையே குறை கூறிக் கொண்டிருக்க வேண்டாம். (அன்றியும் கெட்ட) புனைப்பெயர்களைக் கொண்டு ஒருவருக்கொருவர் பட்டப் பெயர் சூட்டிக் கொள்ளாதீர்கள் . ஈமான் கொண்ட பின்னால் தீய பெயரால் அழைப்பதானது மிகக் கெட்டதாகும். இத்தகு தீமைகளைச் செய்கின்ற எவரொருவர் (தவ்பா செய்து மீளவில்லையானால் அத்தகையோர்தாம் அநியாயக் காரர்கள் . (அல்குர்ஆன் 49 : 11)

அவன்தான் உங்களைப் பூமியில் பின்தோன்றல்களாக ஆக்கினான். அவன் உங்களுக்குக் கொடுத்துள்ளவற்றில் உங்களைச் சோதிப்பதற்காக உங்களில் சிலரை, சிலரைவிட பதவிகளில் உயர்த்தினான். நிச்சயமாக உம் இறைவன் தண்டிப்பதில் விரைவானவன் . மேலும் அவன் நிச்சயமாக மன்னிப்பவன் , மிக்க கருணையுடையவன். (அல் குர்ஆன் 6 : 165)

குறை சொல்லி புறம் பேசித் திரியும் ஒவ்வொருவனுக்கும் கேடுதான்.
( அல்குர்ஆன் 104 : 01 )

பொறாமைக்காரன் பொறாமை கொள்ளும் போது உண்டாகும் தீங்கை விட்டும் காவல் தேடுகின்றேன் ( அல்குர்ஆன் 113 : 05 )

பின்னால் பதுங்கி இருந்து வீண் சந்தேகங்களை உண்டாக்குபவனின் தீங்கை விட்டும் இறைவனிடத்தில் நான் காவல் தேடுகின்றேன் . அவன் மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களை உண்டாக்குகின்றான். ( இத்தகையோர் ) ஜின்களிலும் மனிதர்களிலும் இருக்கின்றனர் (.அல் குர்ஆன் 114 : 4, 5, 6. )

பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால் அவர்கள் இன்பமான செல்வ நிலையிலும், துன்பமான ஏழ்மை நிலையிலும் இறைவனின் பாதையில் செலவிடுவார்கள் . தவிர கோபத்தை அடக்கிக் கொள்ளுவார்கள். மனிதர்கள் செய்யும் பிழைகளை மன்னிப்போராய் இருப்பார்கள். இவ்வாறு அழகாக நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான் . (அல் குர்ஆன் 3 : 134)
அல்லாஹ்வின் பாதையில் போரிடும் உங்களில் இருந்தும் உள்ள முஜாஹிதுகளையும் பொறுமையாளர்களையும் நாம் அறியும் வரை உங்களை நிச்சயமாக நாம் சோதிப்போம். உங்கள் செய்திகளையும், சோதிப்போம். (அவற்றின் உண்மையை வெளிப்படுத்துவதற்காக ) (அல் குர்ஆன் 47 :31)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைப்பதற்காகவே இருக்கிறது. பரீட்சைக்காக கெடுதியையும் நன்மையையும் கொண்டு நாம் உங்களைச் சோதிக்கின்றோம். பின்னர் நம்மிடமே நீங்கள் மீட்டப்படுவீர்கள்.
( அல் குர்ஆன் 21 : 35 )

மனிதர்களில் அழகிய செயலுடையவர்கள் யார் என்று சோதிப்பதற்காக நிச்சயமாக பூமியில் உள்ளவற்றை அதற்கு அலங்காரமாக நாம் ஆக்கினோம்.
(அல் குர்ஆன் 18 : 7 )

நபியே அவர்களின் கரங்கள் முற்படுத்திய பாவத்தின் காரணமாக அவர்களுக்கு ஒரு துன்பம் ஏற்பட்டால் அதற்குப் பரிகாரம் தேடிக் கொள்ள முடியாமலாகிவிட்ட அவர்களின் இழி நிலை எவ்வாறு இருக்கும். என்பதை நீர் பார்ப்பீராக. பின்னர் அவர்கள் நன்மையையும், ஒற்றுமையையும், தவிர வேறெதையும் நாங்கள் நாடவில்லை என்று அல்லாஹ்வைக் கொண்டு சத்தியஞ் செய்பவர்களாக உம்மிடம் வருகின்றனர். அவர்கள் எத்தகையோரென்றால் அவர்களின் இதயங்களில் இருப்பவைகளை அல்லாஹ் அறிவான். ஆகவே நபியே நீர் அவர்களைப் புறக்கணித்து விடுவீராக. மேலும் அவர்களுக்கு நல்லுபதேசம் செய்வீராக. மேலும் அவர்களில் உள்ள கெடுதல்களை அவர்களுக்கு அவர்களின் மனங்களில் படும்படித் தெளிவாக எடுத்துக் கூறுவீராக. (அல்குர்ஆன்4 :62, 63)

எவரேனும் யாதொரு நன்மையான காரியத்துக்கு பரிந்துரை செய்தால் அதில் அவருக்கும் ஒரு பங்கு இருக்கும். அவ்வாறே, யாதொரு தீய விஷயத்துக்கு எவரேனும் பரிந்துரை செய்தால் அதிலிருந்து அவருக்கும் ஒரு பங்கு இருக்கும். மேலும் அல்லாஹ் ஒவ்வொரு பொருளின் மீதும் மிக்க ஆற்றலுள்ளவனாக இருக்கின்றான். ( அல்குர்ஆன் 4 : 85 )

நபியே, தாங்கள் செய்த அற்ப காரியத்தைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறார்களே, அவர்களையும், தாம் செய்யாத நன்மையான காரியங்களைப் பற்றி புகழப் படுவதை விரும்புகின்றவர்களையும் பற்றி நீர் அல்லாஹ்வின் தண்டனையை விட்டும் தப்பித்து வெற்றியில் இருக்கிறார்கள் என்று அவர்களை நீர் திண்ணமாக எண்ண வேண்டாம். அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனை உண்டு. ( அல் குர்ஆன் 3 : 188 )

இன்னும் அல்லாஹ்வுடைய அடியார்கள் யாரென்றால் அவர்கள் தாம் பூமியில் பணிவுடன் நடப்பவர்கள். மூடர்கள் அவர்களுடன் பேசி (வாதா)ட முற்பட்டால் 'ஸலாம்' ( சாந்தியுண்டாகட்டும் என்று ) சொல்லி விலகிப் போய் விடுவார்கள். அல்குர்ஆன் 25 : 63 )
2004 – 01 – 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை 'சாய்ந்தமருது பொதுமக்கள்' என்ற பெயரிலும், 2004 – 01 – 28 ஆந் திகதி 'அக்கறையுள்ள' என்ற பெயரிலும் அநாமதேயமாக வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்தில் "கௌரவ முஸம்மில் மறைக்காயர் ( மஹத்மயா ) கொழும்புக்கு ஸ்பீக்கர் வாங்க தன்னந்தனியே சென்று நாடன் கடையில் பழைய ஸ்பீக்கரை வாங்கி வந்து விட்டு பள்ளிப் பணத்தில் ரூபா 75000 வாங்கினார். கொண்டுவந்த ஸ்பீக்கர் ஆசைக்காவது ஒரு நாள் கூட வேலை செய்யாமல் மூலையில் போடப்பட்டுள்ளது. இதற்கு என்ன தீர்வு மறைக்காயர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னது. எவ்வளவு தண்டம் அடித்தது" என்று கேட்கப்பட்டுள்ளது. 24ந்திகதிய நோட்டீசில் இதேவேளை இரு மறைக்காயர்மார்களின் அம்பலத்தை கே. எம். பீ. ஆதம்பாவா வெளியாக்கியுள்ளார். அப்பிரசுரத்தின் மறுபக்கத்தில் நாடான் கடையில் கம்பி விவகாரம் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

மிக்க நன்றி . அநாமதேயக் கனவான்களே . உண்மையிலேயே நீங்கள் எழுப்பிய வினாவுக்கு எனது பதிலையும் சொல்லித்தானே ஆக வேண்டும்.

நீங்கள் என்னை நன்கு கழுவிச் சுத்தம் செய்து புடம் போட்ட தங்கமாக மாற்றியமைக்கு நான் என்றென்றும் நன்றி கூறுகின்றேன். இன்னும் ஏதேனும் குறைகள் உங்களுக்குத் தென்பட்டால் சந்தேகங்கள் ஏற்பட்டால், அதையும் பெரிய நோட்டிசாக எழுதி இன்ரநெட்டிலும் போட்டு வையுங்கள். எனக்காக ஒரு வெப் தளத்தை உருவாக்கினாலும் பரவாயில்லை. தகவல்கள் திரட்டுவது கஷ்டமாக இருந்தால் எனது வீட்டுக்கு வந்து கேட்டால் ஆதார பூர்வமான பல தகவல்களை நான் தந்து உதவுவேன்.

இந்த நோட்டிசை அடிப்பதற்கு முன்னர் என்னைச் சந்தித்து இது பற்றிக் கேட்டிருந்தால் என்னைப் பற்றி நீங்கள் நன்கு கழுவிக் குடிக்கக்கூடிய, உங்களுக்கு மிக விருப்பமான ருசியான அழுக்குகளை நான் தந்திருப்பேன்.

நான் உங்களை இட்டு மனம் வருந்துவதால் என்னால் கூறக்கூடிய ஒரு புத்திமதி என்னவென்றால் உங்கள் மீது அல்லாஹ்வுடைய பலாய்கள் வந்து இறங்கி உங்களையும் உங்கள் குடும்பங்களையும் தாக்கு முன்னர் தவ்பா செய்து மீண்டு கொள்ளுங்கள். மறுமையில் என்னைச் சந்திக்கும் வேளை இதை நான் உனக்கு ஞாபகப் படுத்த எல்லாம் வல்ல இறைவன் என்மீது அருள் புரிவானாக. இறைவனால் விதிக்கப்பட்ட மறுமையைக் கொண்டும், மவுத்தைக் கொண்டும் இஸ்லாத்தின் ஐந்து கடமைகளைக் கொண்டும் நான் என்னையும் உங்களையும் எச்சரிக்கின்றேன். ஏனென்றால் எனது மவ்த் என்னை நெருக்கிக் கொண்டிருக்கின்றது.

மேலே கூறப்பட்டுள்ள குர்ஆனின் வசனங்கள் எனதும் உங்களினதும் ஈடேற்றத்திற்காகத் துணை புரியும் என்பதற்காக தொகுத்துள்ளேன். அல்லாஹ் ஒவ்வொரு மனிதனையும் ஒரு வருடத்தில் இரு தடவை சோதிக்கின்றான். இது பள்ளிவாசல் காப்பாளர்களாக அல்லாஹ் நியமித்துள்ளவர்களுக்கான சோதனை. அல்லாஹ்வின் மீது இவர்கள் உறுதியாக இருக்கின்றார்களா என்பதை இப்பொழுது அல்லாஹ் சோதிக்கின்றான். அல்லாஹ்வின் விரோதியாகிய சைத்தான் பல்வேறு சந்தேகங்களை உருவாக்கி பிரச்சினைகளை உருவாக்குகின்றான்.

சந்தேகம் என்பது பெரிய தீராத வியாதி. மனிதனைப் படைக்கப் போகின்றேன் என்று அல்லாஹ் கூறியதும் சைத்தானுக்கு சந்தேகம் ஏற்பட்டது. என்னைவிட மேலான ஒன்றை இறைவன் படைக்கப் போகின்றானோ? எதற்காகப் படைக்கப் போகின்றான் ? சைத்தானாகிய இப்லீசாகிய நான் தானே பிரதானமானவன் இந்த சந்தேகத்தின் பேரிலேயே அவன் ஆதம் (அலை) அவர்களுக்கு சுஜூது செய்யவில்லை. எனவே இறைவன் கேட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கைகளால் படைத்தவருக்கு ஸுஜூது செய்வதை விட்டும் உன்னைத் தடுத்தது எது ? பெருமையடித்தாயா ? அல்லது உயர்ந்தவர்களில் ஆகிவிட்டாயா? என்று ( அல்லாஹ் ) கேட்டான். அல்குர்ஆன் அத்தியாயம் 38 வசனம் 75

நான் நெருப்பினால் படைக்கப்பட்டேன் . அவரை களி மண்ணினால் படைத்தாய். எனவே நான் மேலானவன் என்றான் இப்லீஸ். அல்குர்ஆன் அத். 38 – வ 76
இறைவனின் சாபம் மறுமை நாள் வரை இருக்கும் . அத்38 – வ 78
அதற்காக அவகாசம் கேட்டான் அத் 38 – வ79
அல்லாஹ் அவகாசம் கொடுத்தான் அத்38 – வ 80
உன் கண்ணியத்தின் மீது சத்தியமாக மனிதர்கள் யாவரையும் நான் வழி கெடுப்பேன் என்று சபதம் கூறினான் சைத்தான் . அத்38 – வ82
(சைத்தானை )உன்னைச் சார்ந்து வருகின்றவர்களைக் கொண்டு நான் நரகத்தை நிரப்புவேன் என்று அல்லாஹ் கூறினான். அத்தியாயம் 38 வசனம் 85

சிறைச்சாலைக்கு வெளியே இருப்பவன் சிறைச்சாலைக்குள் என்ன இருக்கின்றது என்பதை அறிய முற்படுகின்றான். சிறைச்சாலைக்கு உள்ளே இருப்பவன் எப்படி வெளியேறுவது என்று கவலைப் படுகின்றான். திருமணம் முடித்தவன் இந்த இக்கட்டான வாழ்க்கையில் இருந்து தப்பித்துக் கொள்ள வழி தேடுகின்றான். திருமணம் முடியாதவன் திருமணத்தை முடித்து சந்தோஷமான வாழ்வு வாழலாம் என்று சிந்திக்கின்றான். அவனது இளம் உடலில் ஓடுகின்ற உதிரமும் மறைமுக உறுப்பில் வெளியாகும் திரவமும் மனிதனை ஆட்டிப் படைக்கின்றது. இச்சந்தர்ப்பத்தை சைத்தான் பயன் படுத்துகின்றான். அதற்காகத்தான் உமது வாலிபத்தை எவ்வாறு கழித்தீர் என்று ஒரு கேள்வி மறுமையில் கேட்கப் படும். நமது நபி (ஸல்) அவர்களுக்கு நாற்பது வயதிலேதான் இறைவன் நபிப் பட்டத்தைக் கொடுத்தான் . இன்றைய வாழ்நாளில் மூன்றில் இரண்டு பகுதி கழிந்த பின்னர் தான் இது நிகழ்ந்தது. எனவே உடல் உள்ளம் இரண்டும் ஒருமித்து இயங்க அது பொருத்தமான வயது என இறைவன் அப்படிச் செய்துள்ளான். மனிதர்களைக் கொண்டு அல்லாஹ்வுடைய அற்புதங்களை வெளிப்படுத்த நாடியே அல்லாஹ் இப்படி செய்துள்ளான். அது போலவே இன்று ஒரு நொடிப் பொழுதில் உலகில் தொடர்பாடல் ஏற்பட்டுள்ளது. நான் நாடான் கடைக்குப் போன விவகாரம் இப்பொழுது அன்டாட்டிக்கிலும் பேசப்படுகின்றது. அவ்வாறு பலரும் என்னைக் கழுவித் துப்பரவு செய்வதையே நான் விரும்புகின்றேன். மணச் சுவுக்காரம் இருந்தால் அதையும் தேய்த்து கழுவுங்கள். இதுதான் இன்றைய நியதி.

1997 டிசம்பர் மாதத்திலும் அதையடுத்து வந்த 1998 பெப்ரவரி மார்ச் காலப் பகுதி மர்ஹூம் அல்ஹாஜ் எம்.ஐ.எம். மீராலெவ்வை அவர்கள் சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் தலைவராக இருக்கும் காலம். மறைக்காயர் சபை எடுத்த முடிவுகளின் படி ஒலிபெருக்கி தொடர்பான பொருட்கள் பலவற்றை கொள்வனவு செய்ய வேண்டி இருந்தது.

அரச கடமையின் பொருட்டு நான் அடிக்கடி கொழும்புக்குச் செல்ல வேண்டி இருந்தது. நீங்கள் அடிக்கடி கொழும்புக்குச் சென்று வருவதால் இந்தப் பொருட்களையும் வாங்கி வாருங்கள் என்று சபை என்னைக் கேட்டது. தனியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று பொருட்களை வாங்க நான் விரும்பவில்லை என்பதை அவர்களுக்குக் கூறினேன். பரவாயில்லை என்று என்னிடம் ஒப்படைத்தனர்.

இதன்படி சாய்ந்தமருது சற்குரு மதரசாவின் பக்கமாயுள்ள பல்கலைக்கழக போதனாசிரியர் ஜனாப் நூர்தீனை அழைத்து வந்தேன். அவர் அட்டாளைச் சேனையில் திருமணம் முடித்திருந்தார். அப்போது 063 – 77470 தொலைபேசி ஊடாக செய்தி அனுப்பினேன். பழைய காரியாலய அறையில் வைத்து தேவையான பொருட்கள் பட்டியல் படுத்தப் பட்டன. முன்னாள் பொருளாளர் அல்ஹாஜ் எம்.சீ.ஏ. ஹமீது அவர்களும், செயலாளர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். மொகிதீன் அவர்களும் இக்கருமத்தைச் செய்தனர். வாங்க வேண்டிய பொருட்கள் பட்டியலில் நூர்தீன் ஒப்பமிட்டுள்ளார். அதன் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு – 01)

கொழும்பில் எங்கு இப்பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்பதை பொருளாளர் ஹமீது அவர்களும், செயலாளர் மொகிதீன் அவர்களும் எனக்கு கண்டிப்பாகக் கூறினர். அதன் படி கொழும்பு –10, சிறி சங்கராஜமாவத்த, 165 ஆம் இலக்கத்தில் அமைந்திருக்கும் சீடபிள்யூஈ (CWE Wholesale) மொத்த விற்பனவு நிலையத்தில் தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு என்.எச். விஜேவர்தனாவையும், கொழும்பு –11 கெய்சர் வீதி 26 ஆம் இலக்க Elite Radio எலைட் ரேடியோ தொழிற்சாலை பொறியியலாளர் திரு. ஏ.எஸ். பீ.ஈ. தென்னக்கோன், கொழும்பு –11 கெய்சர் வீதி இலக்கம் 108, றொபர்ட் ஏஜென்சீஸ் முகாமையாளர் ஆகியோர்களையும் சந்தித்து இப்பொருட்கள் எமது பள்ளி வாசலுக்குத் தேவை என்றும், கழிவு விலையில் தரவேண்டும் என்றும் கூறி, 5 % வீத விலைக்கழிவில் விலை மனுவை (Quotation)ஐப் பெற்றுக் கொண்டேன். அவற்றின் பிரதிகள் இத்துடன் இணைக்கப்ட்டுள்ளன. ( இணைப்பு – 02 )

நான் உடனடியாகப் பொருட்களை கொள்வனவு செய்யவில்லை. இந்த விலை மனுக்களைக் கொண்டு வந்து சபையில் விளக்கமளித்தேன். சபை அவற்றைக் கொள்வனவு செய்யும்படி என்னைப் பணித்தது.
அதன் பின்னர் மீண்டும் ஒரு தடவை நூர்தீன் அவர்களை அழைத்து வந்து இந்த விலை மனுவில் சொல்லப்பட்ட பொருட்கள் சரியானதா இவற்றைக் கொள்வனவு செய்யலாமா என்று செயலாளர் அல்ஹாஜ் மொகிதீன் அவர்கள் பொருளாளர் அல்ஹாஜ் எம்.ஸீ.ஏ. ஹமீது அவர்கள் ஜனாப். ஐ.எல். உதுமான்கண்டு மறைக்காயர் ஜனாப் எம்.ஸீ.எம்.மீராசாகிபு மறைக்காயர் ஆகியோர் முன்னிலையில் கேட்ட போது அவர்களும் அவற்றை வாங்கும்படி சொன்னார்கள். (இணைப்பு – 3)

அப்போது நான் நூர்தீனையாவது என்னுடன் அனுப்புங்கள் ஏனென்றால் கம்பனிகளிலும், சீ டபிள்யு ஈ இலும் பொருட்களை வாங்கினால் திருப்பிக் கொடுக்க முடியாது என்று கூறிய போது தேவை இல்லை நீங்கள் வாங்கி வாருங்கள் என்று எல்லோரும் கூறினார்கள். நூர்தீன் அவர்களுக்கு வகுப்புக்கள் இருப்பதால் வர முடியாது எனக் கூறி விட்டார்.

எனவே நான் கொழும்புக்குச் சென்றேன். உரிய பொருட்களை வாங்கச் சென்றேன். இதற்கான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்காக அந்தக் கம்பனி, சீடபிள்யு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவற்றில் இருந்து தொலைபேசி மூலம் பொருளாளர் செயலாளர் அவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்டேன். அதெல்லாம் சரி. பொருளை வாங்கி வருமாறு பணித்தனர்.

இதன்படி பொருட்களை வாங்கி பாய் ட்ரான்ஸ்போட் மூலமாக அனுப்பி வைத்தேன். நான் நாடான் கடைக்குப் போகவுமில்லை நாடான் கடையில் பொருட்களை வாங்கவுமில்லை. இன்றும் கூட நான் வாங்கி வந்த அம்பிலிபயர்தான் பாவிக்கப் படுகின்றது. இது ஒரு ஒரிஜினல் ஜப்பானில் செய்யப்பட்ட மிகத் தரமான அம்பிலிபயர் என்று கடந்த மாதம் ஒலிபெருக்கி திருத்த வேலைகளுக்காக கொழும்பில் இருந்து வந்த தொழில் நுட்ப உத்தியோகத்தர் கூறியுள்ளார். ஆகவே என்னை நாடான் கடையில் கண்ட கனவான் உடனே ஒரு போட்டோவை எடுத்து கொடுத்திருக்கலாந்தானே. இந்த ஆறு வருட காலமாக ஏன் நீங்கள் மௌனம் சாதித்தீர்கள் இதைக் கண்டு பிடித்து எனக்கு தண்டனை வழங்கி இருக்கலாந்தானே. . இந்தபொருட்கள் வாங்கிய பற்றுச் சீட்டுகளின் பிரதிகள் உங்கள் பார்வைக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு – 04)

இதன்படி நான் கொழும்புக்குப் போன கணக்கு விபரங்களைக் கொடுத்தேன். சுமார் நாலு ஐந்து நாட்கள் இதற்காகப் பாடுபட்டேன் . இந்த முயற்சியை அல்லாஹ்வுக்காக நான் செய்தமையால் முதல் தடவை மாத்திரம் கொழும்புக்குப் போக 200 ரூபாவும், ஊருக்கு வர 175 ரூபாவும், கொழும்பில் ஆட்டோ கூலியாக 55 ரூபாவும் பெற்றுக் கொண்டேன். சாப்பாடு தங்கல் என்பவற்றுக்கு பணம் பெற்றுக் கொள்ள வில்லை. இரண்டாவது தடவை நான் எனது அரச அலுவலுக்கு கொழும்புக்குச் சென்று வந்ததால் பிரயாணம், சாப்பாடு, தங்கல் போன்றவை ஒன்றுக்கும் பணம் பெற்றுக் கொள்ளவில்லை . பள்ளிவாசலுக்கு நான் சமர்ப்பித்த கணக்கு அறிக்கையின் பிரதி இத்துடன் இணைத்துள்ளேன். ( இணைப்பு – 05)
நான் கொழும்பில் இருந்து வந்ததும் பொருட்கள் பள்ளிவாசலுக்கு வந்ததாகக் கூறினார்கள். ஜனாப் நூர்தின் அவர்களைக் கொண்டு பொருட்கள் பரிசீலிக்கப்பட்டு பொருத்தப்பட்டு பயன்படுத்தப் பட்டன. 1998ஆம் ஆண்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சியைப் பற்றி எனது அர்ப்பணிப்புக்கு சபை என்னைப் பாராட்டியது. 1998 பெப்ரவரி, மார்ச் காலப் பகுதியில் நடைபெற்ற இதையிட்டு நிருவாகமோ வேறு எவருமோ இப் பொருட்கள் நாடான் கடையில் வாங்கிய பொருட்களாக 2004 – 01 – 28 இல் நோட்டிசில் வெளிப்படுத்தும் வரை என்னிடம் எவரும் கூறவில்லை . நான் அறிந்திருக்கவுமில்லை.

இந்த நாடான் கடை தொடர்பான நிகழ்வொன்றை நான் உங்களுக்கு வெளிப்படுத்தவேண்டியுள்ளது. அந்த நிகழ்விலும் இந்த விடயம் என்னோடு தொடர்புடையது என்பதை நான் அறிந்திருக்கவில்லை என்பது நூறு வீதம் உண்மையானதே.

1994 – 08 – 01 இல் இருந்து நான் மறைக்காயராக நியமிக்கப் பட்டுள்ளதாக எனக்கு ஒரு கடிதம் பள்ளிவாசலில் இருந்து கிடைக்கும்வரை அதை நான் அறிந்திருக்கவில்லை . நான் கடமையேற்ற சொற்ப தினங்களில் தேங்கிக் கிடந்த பள்ளிவாசல் கணக்காய்வு வேலைகளைச் செய்யும்படி நான் உட்பட 10 பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட ஒரு குழுவை சபை நியமனஞ் செய்து 1994 – 10 – 15 ஆந்திகதியிலிருந்து கணக்கு ஆய்வு வேலைகளைச் செய்யும்படி கோரியிருந்தது. (இணைப்பு – 6)

அதன்படி அன்றைய தினம் என்னைத் தவிர வேறு ஒருவரும் சமுகமளிக்கவில்லை. பின்னர் அல்ஹாஜ் எம்.ஸீ.எம். மீராசாய்வு, அல்ஹாஜ் ஏ. செயினுலாப்தீன் ஆகியோர்களும், ஜனாப் இஸட்.எம். அலியார் அவர்கள் இடையிடையேயும் சமுகமளித்தனர். நான் மிகத் தீவிரமாகக் கணக்குகளை செய்து சரிகண்டமையால் என்னையே தலைமை வகுக்கச் சொல்லி பல கணக்கறிக்கைகளை நான் தயாரித்து சபைக்குச் சமர்ப்பித்து பாராட்டுக்களையும் பெற்றேன். 10 பேரைக் கொண்ட கணக்காய்வுச் சபை இறுதியாக மூன்று பேரைக் கொண்டதாக ஆகியது.

தலைவர் அல்ஹாஜ் எம்.ஐ.எம். மீராலெவ்வை அவர்களின் மறைவுக்குப் பின்னர் அல்ஹாஜ் எம்.ஸீ.ஏ. ஹமீது மறைக்காயர் அவர்கள் தலைவராக தெரிவு செய்யப்பட்ட கூட்டத்தில் என்னை மீண்டும் கணக்காய்வு குழுவிற்கு பிரேரித்த போது நான் வாபஸ் பெற்றுக் கொண்டேன். ஏனெனில் என்மீது காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களில் ஒருவரான தற்பொழுது பொருளாளர் பதவியை இராஜினாமாச் செய்துள்ள சகோதரர் ஜனாப் கே.எம்.பீ. ஆதம்பாவா மறைக்காயர் பொருளாளராக வந்து விட்டார். கணக்கு வேலைகள் அவருக்கு எப்படி என்று எனக்குத் தெரியாது. எனவே கணக்கு தொடர்பாக அடிக்கடி இவருடன் சண்டை பிடிக்க வேண்டி வரும் என்பதே எனது அபிப்பிராயம்..

இதன் பின்னர் 2001 – 02 – 20 ஆம் திகதி எனக்கு ஒரு கடிதம் வந்தது. (பிரதி இணைக்கப் பட்டுள்ளது) ( இணைப்பு – 07 ) கணக்காய்வுக் குழுவில் என்னையுஞ் சேர்த்து கணக்காய்வு செய்ய வேண்டும் என 2001 – 02 – 18 ஆந் திகதி நடை பெற்ற மறைக்காயர் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும், உடனே செயற்படும்படியும் அதில் கோரப்பட்டிருந்தது. சபையின் தீர்ப்பை மதித்து மீண்டும் செயற் பட்டேன்.

இக்காலப் பகுதிக்குள் டோம் கட்டும் வேலை செய்ய வேண்டியிருந்தது. நான் நிந்தவூருக்குப் போய் எனது அன்பு மாணவரான ஹைரு பொறியியலாளரின் தகவல்களைப் பெற்று அவருடன் கண்டிக்குக்கு தொலைபேசியில் கதைத்து அவ்விபரங்களை தற்போதைய தலைவர் ஐ.எம். முகைதீன் அவர்களிடம் கொடுத்தேன். அவர் ஹைரு பொறியியலாளருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்தார். பெருந்தொகையான பணம் டோம் செய்யத் தேவைப்பட்டது. நிருவாகத்தில் இருந்தவர்கள் பல இடங்களிலும் இருந்த காசுகளை ஒன்று திர ட்டி டோமுக்கு முற்பணங் கொடுத்து வீட்டனர். ஆனால் அக்காசுகள் வந்த, போன வரலாறுகள் கணக்குகளில் ஒழுங்காகப் பதியப் படவில்லை. இதைப் பற்றிய தகவல்களை கேட்டபோது பொருளாளரும் கணக்கு எழுதுநரும் என் மீது சீறி விழுந்தனர். கணக்குகள் தெளிவாக எழுதப்படல் வேண்டும் என்று கூறினேன். இதனால் சிறு சிறு உராய்வுகள் ஏற்பட்டன. இந்த இழுபறி காரணமாக வக்பு சபைக்கு கணக்குகள் அனுப்பத் தாமதமடைந்தன. நான் பெரு முயற்சி செய்து இரவு பகலாக கஷ்டப்பட்டு கணக்குகளைக் கண்டு பிடித்து சரி செய்து அறிக்கை தயாரித்துக் கொண்டிருந்தேன். இந்த வேளையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு உதவியாக நியமிக்கப்பட்ட ஜனாப் நிசாம் மரைக்காயர். அல்ஹாஜ் ஏ.எம். இப்றாகீம் அதிபர் ஆகியோருக்கும் கணக்கு தொடர்பாக பயிற்சி அளிக்க வேண்டியிருந்தது.

ஒரு நாள் சபைக் கூட்டம் நடந்து முடிந்து வெளியேறும் தறுவாயில் இன்று புதிதாக பொருளாளர் புதிதாக பதவியை ஏற்றுக் கொண்டவர் என்னைச் சுட்டிக்காட்டிச் சொன்னார் "என்ன இவர் கணக்கு அறிக்கையை முடிக்கிறார் இல்லையாம். அப்படி இல்லாட்டி அவர்ர கணக்கை நாம முடித்து விட்டுப் போறதானே " என்று. இப்படி என்னுடைய கணக்குகளை பார்ப்பதற்கு இறைவனைத் தவிர வேறு நபர்களும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது இப்போதுதான் எனக்குத் தெரிய வருகிறது. அதே போல அநாமதேயமாக மறைந்திருந்து மடுத்தோண்டும் நோட்டிஸ் காரரும் என் கணக்குப் பார்க்கத் தொடங்கி இருக்கின்றார்கள். பின்னால் பதுங்கி இருந்து வீண் சந்தேகங்களை உண்டாக்குபவன் யார் என்று அல்லாஹ் அவனது திருமறையில் 114 : 4, 5, 6 ஆகிய வசனங்களில் கூறுகின்றான். இப்பிரசுரத்தின் 2 ஆம் பக்கம் பார்க்கவும்.

ஒருநாள் காசு கணக்குப் புத்தகம் ஒன்றை எடுத்துப் பார்த்த போது அதில் சிறு பிள்ளைகள் விரலால் தேய்த்து அழித்தது போன்று அழித்து கணக்குப் புத்தகத்தை அசிங்கப் படுத்தியிருந்ததைக் கண்டேன். அதில் கணக்குகள் திருத்தப் பட்டிருந்தன. எனவே, தொடர்ந்து வேலை செய்ய என் மனம் விரும்பவில்லை. இது யாருடைய வேலை என்று உசாவினேன். இது பொருளாளர் கே.எம்.பீ. ஆதம்பாவாவுடைய வேலை என்று அறிந்து கொண்டேன்.

பின்னர் இதை செயலாளர், உப செயலாளர், தலைவர் கணக்கு எழுதுநர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன். இதன் காரணமாக கணக்கு அறிக்கை தயாரிக்க இன்னும் இரண்டு மூன்று மாதங்கள் தாமதமாகியது. தலைவர் சொன்னார் அந்த கறை பட்ட கணக்குப் பக்கத்தில் ஒரு சிறு குறிப்பை எழுதிவிட்டு கணக்கை தயாரித்துத் தரும்படி. அதன் படி செய்ய நான் மறுத்து வந்தேன். தலைவரின் வற்புறுத்தலாலும், அவசரமாக வக்பு சபைக்கு கணக்கு அனுப்ப வேண்டி இருந்தமையாலும் பின்னர் நான் அக்குறிப்பை எழுதிவிட்டு கணக்கைத் தயாரிக்கலானேன். அக்குறிப்பில் இத்தகைய வேலை சந்தேகத்தை ஏற்படுத்தும் இப்படி காசுப் புத்தகத்தில் செய்யக் கூடாது என்பதே அக்குறிப்பாகும். இதைக் கண்ணுற்ற பொருளாளர் கே.எம்.பீ. ஆதம்பாவா மறைக்காயர் என்னுடன் நடந்த விதம் வியப்புக்குரியது.

2002 நோன்புப் பெருநாளுக்கு முதல் நாள் சபைக் கூட்டம் கலைந்து நானும், செயலாளர் அல்ஹாஜ் ஏ.எல்.எம். மொகிதீன் அவர்களும், தலைவர் ஜனாப் ஐ.எம். மொகிதீன் அவர்களும் காரியாலய அறைக்கு வந்த போது அங்கே மிக ஆவேசத்துடன் இருந்த எனது சகோதரர் பொருளாளர் கே எம் பீ ஆதம்பாவா அவர்கள். இந்த கணக்குப் புத்தகத்தில் குறிப்பு எழுதியது யார்? உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது. நீ ஓடிற் என்றால் கணக்கை சரி பிழை பார்ப்பது தான் உன்ர வேலை. இதெல்லாம் செய்ய நீ யார் என்று மிகுந்த ஆவேசத்துடன் மிக அசிங்கமான வார்த்தைகளால் எனக்கு ஏசி எனக்கு அடிக்க முயற்சி செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையும் எனது குடும்பத்தையும் அவதூறு பேசினார். அவ்வாறு பேசும் போது: டேய் உன்னைப்போல நாடான் கடையில ஆறாயிரத்துக்கு வாங்கி அறுபதினாயிரத்துக்கு விற்றவன் என்று நினச்சிகிட்டியா என்று சொன்னார். ஆனால் அப்போது கூட எனக்கு இந்த ஸ்பீக்கர் விசயம் தெரியாது. நான் அன்று அவரிடம் சொன்னேன் நான் நோன்புடன் இருக்கின்றேன். இதைத் தவிர நான் ஒன்றும் பேசவில்லை. அந்நேரம் தலைவரும் செயலாளரும் தலையிட்டு அவருடைய ஆவேசத்தைக் குறைத்தனர். எனினும் அந்தத் தலைவர் " நான் சொல்லித்தான் முஸம்மில் அந்த குறிப்பை எழுதினார் என்று குறிப்பிடவில்லை." நான் அந்நேரத்தில் தலைவர் அவர்களே இதற்கு பதில் சொல்லுங்கள் என்று கூறினேன். நான் நோன்புடன் இருந்தபடியால் தலைவர்தான் சொல்லி இதை நான் செய்தேன் என்று குறிப்பிட்டால் குழப்பம் வேறு திசைக்கு மாறி விடுமோ என்று அஞ்சினேன்.

இங்கே சொல்லப் போனால் எனது தகப்பனாரின் ஒன்று விட்ட பெரியம்மாவின் மகனே இந்த கே.எம்.பீ. ஆதம்பாவாவின் தகப்பன் கோசிப் பரிசாரி. அவர் எனக்கு பெரியப்பா முறை. அதன் காரணமாக நான் எனது சகோதரன் என்று அவருக்கு எந்நேரமும் மதிப்பு வைத்து வந்தேன்.

இன்று நான் சிந்திக்கின்றேன். ஏற்கனவே என்னை அசிங்கப் படுத்த வேண்டும் என்று ஒரு சிலர் திட்டம் வைத்திருந்திருக்கிறார்கள் என்று. பரவாயில்லை. அதற்குரிய கூலியை அல்லாஹ் அவருக்கும் அதோடு சம்பந்தப் பட்டவர்களுக்கும் கொடுப்பான். அன்று கூட இந்த நாடான் கடை விவகாரம் என்னோடு சம்பந்தப்பட்டது என்று நான் அறிந்திருக்கவில்லை.

2002 நோன்புப் பெருநாள் கழித்து சில நாட்களின் பின்னர் தலைவர் காரியதரிசி அவர்களிடம் நான் சொன்னேன். இந்த விவகாரத்தை நான் சபையில் பேசப் போகிறேன். நாடான் கடை விவகாரம் ஒன்றும் பேசப்பட்டது அது என்ன என்று எனக்குத் தெரியாது என்றெல்லாம் கேட்டேன். அதற்கு அவர்கள் நீங்கள் சபை குழப்பியாக இருக்க வேண்டாம். இது ஒரு சோதனைக் காலம். பொறுத்திருங்கள் என்று கூறினார்கள். சபையில் நீங்கள் பேசக் கூடாது என்றார்கள். அத்துடன் நானறியாமலே என்னை கணக்காய்வுக் குழுவில் இருந்தும் நீக்கி விட்டனர். பிறகு அங்கு எனக்கு என்ன வேலை.

அப்போது நான் யோசித்தேன் சபையில் பேசாமல் இருப்ப தென்றால் சபைக்கு ஏன் போக வேண்டும் என்று நினைத்து சுமார் ஆறுமாத காலம் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டேன். சிலர் என்னிடம் கேட்பார்கள் சபையில் உங்களைக் காணவில்லை. அங்கு பதவிகளுக்கு பலர் நியமிக்கப் படுகிறார்கள். விசயம் அறிந்த நீங்கள் ஏன் வருவதில்லை என்று. கூறினார்கள். பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறி விட்டு இருந்தேன். இச் சம்பவத்தை சக மறைக்காயர்மார் இடத்திலும் நான் பிரஸ்தாபிக்கவில்லை. ஆனால் அண்மையில் கணக்கு எழுதுநர் கணக்கு அறிக்கை தயாரிக்க எனது உதவியை நாடினார். நான் மீண்டும் புதிய கணக்காய் வாளர்களின் வெறுப்பை சம்பாதிக்க நேரிடும் என்பதற்காக மறுத்து விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் தஹஜ்ஜுத் தொழுகை வேளை. தொழுது முடித்து துஆவில் இருக்கும் போது "நீ ஏன் பள்ளிக் கடமைகளுக்கு போவதில்லை. பள்ளி அல்லாஹ்வுடையது. நீ அல்லாஹ்வுக்கு மட்டுந்தான் பயப்பட வேண்டும் என்று உனக்குத் தெரியுந்தானே. பயப்படாதே உனக்கு நேர்வழி உண்டு" என்று கிட்ட இருந்து ஒருவர் சொல்லுமாப் போல் எனக்கு விளங்கியது. எனது உடல் நடுங்கியது. அதன் பின்னர் நான் பள்ளிக்குப் போய் கடமைகளில் ஈடுபட்டேன்.

இன்று எனக்கு நாடான் கடை மோசடி விவகாரம் பற்றிக் கூறி தண்டம் அடிக்கும் படியும் பேசப் படுகின்றது.

அத்தோடு இந்தப் பள்ளிவாசலுக்கு சவூதி அரேபியாவில் இருந்து நமதூரைச் சேர்ந்த ஜனாப். ஏ.எல்.எம். தஸ்லீமும் மறுபேரும் சேர்ந்து அனுப்பிய 45 மின் விசிறிகளை அரசாங்கத்தினால் விதிக்கப்படும் சுங்கவரி, விற்பனை வரி இன்றி எவ்வாறு கொண்டு வந்து சேர்த்தேன் என்ற விபரங்கள் உள்ளடங்கிய தொகுப்பொன்றை உங்களின் பார்வைக்கு இணைத்துள்ளேன். நான் எவ்வாறு கஷ்டங்களை அனுபவித்து இந்த மின்விசிறிகளை கொண்டு வந்து சேர்த்தேன் என்பதை எனது அன்பு மாணவனும். தற்போதைய சுங்க அதிகாரி - பணிப்பாளருமான அல்ஹாஜ். ஏ.எல்.எம்.ஏ.நஸீர் அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். இந்நிகழ்ச்சிக்காக சபையில் பாராட்டப் பட்டேன். ( இணைப்பு -08 )

நான் என்னைப் பற்றி உங்களுக்குச் சொல்வதாக இருந்தால் எவருடைய ஒரு சதத்தையும் நான் அபகரிக்கவுமில்லை. வஞ்சிக்கவுமில்லை. எவருக்கும் குழி தோண்டவுமில்லை. எவருடைய வருமானத்தையும் தடுக்கவுமில்லை. ஆனால் அல்லாஹ்வுக்குப் பொருத்தமான வழிகளில் உழைக்க பலருக்கு வழிகாட்டியுள்ளேன். நல்ல சமூக சிந்தனையுடன் தான் செயற்படுகின்றேன். உதாரணமாக உங்கள் முன் காட்சியளிக்கும் பொது நூலகம் எனது சிந்தனையில் இருந்து உதித்தது. இதன் வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள் 1969 -06-20 வெள்ளிக்கிழமை ,தினகரனின் முன்பக்கம், 1986-08-31 சனிக்கிழமை தினகரன் ஆகியவை உங்களுக்கு சான்று பகரும். பலர் எனக்கு குழி பறித்துள்ளனர். ஆனால் என் கண் முன்னாலேயே அவர்கள் அக்குழியில் வீழ்ந்து கிடப்பதை நான் காண்கின்றேன்.

எனது வாழ்க்கை வட்டம் எப்படி என்று என்னோடு நெருங்கிப் பழகியவர்களுக்குத் தெரியும். நான் ஒரு நாளைக்கு ஐந்து மணி நேரம் மாத்திரம் உறக்கத்தில் இருப்பேன். 19 மணித்தியாலம் ஆகுமான உழைப்புக்களில் ஈடுபடுவேன். இன்றைய கால கட்டத்தில் நான் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளராக இருக்கின்றேன். ஒரு மாதம் எனக்கு ரூபா 16,717/= ஓய்வூதியமாகக் கிடைக்கின்றது. அரசில் சத்தியப் பிரமாணஞ் செய்த மொழிபெயர்ப்பாளராக இருக்கின்றேன். கொழும்பில் உள்ள மத்தியஸ்தர்கள் சபை ஆணைக்குழு, சுகாதார போசணை நலன்புரி அமைச்சின் இலங்கையின் மருத்துவக் காப்பும் உறுதியான உபயோகமும் பற்றிய திட்டம், காணி நிருணய திணைக்களம் கொழும்பு, கம்பளை, சாய்ந்தமருது பிரதேசச் செயலகம் என்பவற்றில் மொழி பெயர்ப்பாளராக கடமை செய்து கொண்டிருக்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் எனது மொழிபெயர்ப்புக்களுக்கு 360 சொற்களுக்கு ரூபா 200/= ஊதியம் வழங்குகின்றது. மொழிபெயர்ப்புக்கள் புத்தகங்களாகவும், வெளியீடுகளாகவும், வர்த்தமானிகளாகவும் வெளி வந்து கொண்டிருக்கின்றன. மகரகம தேசிய கல்வி நிறுவகத்தில் மேலதிக மொழி விருத்திப் பாடநெறியின் கல்முனைப் பிராந்திய சிரேஷ்ட போதனாசிரியராக இருக்கின்றேன். சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலத்தில் அந் நிலையம் இயங்கி வருகிறது. சனி ஞாயிறு தினங்களில் ஆசிரியர்களுக்கு சிங்களமும் ஆங்கிலமும் அங்கு போதிக்கப் படுகின்றன. நான்கு போதனாசிரியர்கள் அங்கு கடமையாற்றுகின்றனர். ஒருநாளைக்கு 500/= ஐ தேசிய கல்வி நிறுவகம் எனக்கு ஊதியமாக வழங்குகின்றது. போதனாசிரியர்களுக்கு 400 ரூபாவை வழங்குகிறது. அரச கரும மொழித் திணைக்களத்தில் போதனசிரியராக இருக்கின்றேன். 108 மணித்தியால பாடநெறி ஒன்றுக்கு எனக்கு 27000/= ஐ வழங்குகின்றது. எனது மகன் லண்டனில் தொழில் புரிகின்றார். கல்முனை நகரத்தில் கடந்த 25 வருடங்களாக போட்டோறிஓ கடையை நடத்தி வருகின்றேன். திவயின சிங்கள தினசரிப் பத்திரிகைக்கு செய்தியாளராகவும், கட்டுரையாளராகவும் கடமையாற்றுகின்றேன். நான் பதவிகளைத் தேடி அலையவில்லை. பதவிகள் என்னைத் தேடி வருகின்றன. என்னைப் பற்றி உங்களுக்கு இன்னும் என்ன சொல்ல வேணும். அது சரி உங்களுக்கு ஏன் இவ்வளவு பொறாமை. உங்களுக்கு நான் என்ன தீமை செய்திருக்கின்றேன் என்று சுட்டிக் காட்ட முடியுமா ? இப்ப நல்ல தகவல்கள் தந்துள்ளேன். நல்ல பெறுமதியான நோட்டிசுகளை அடித்து இன்ரனெற்றிலும் போடலாம். எனது ஈமெயில் முகவரி. alhajaliyarmuzammil@yahoo.com. நல்லாக் கழுவுங்கள். நான் மவுத்தாகுவதற்கு முன்னதாக கழுவி முடித்துக் கொள்ளுங்கள் . ஏனென்றால் முன்கர் நகீருக்கு வேலை குறைந்து விடும்.

அன்புள்ள அநாமதேயக் கனவான்களே! ஒன்றை மட்டும் நீங்கள் நினைவில் வைத்திருங்கள். சாய்ந்தமருது ஒரு மிகப் பழமை வாய்ந்த ஊர். இன்று கிழக்கில் பிரசித்தி பெற்ற நகரமாக எல்லோராலும் புகழ்ந்து கூறப்படுகின்றது. வரலாற்றுப் புகழ் மிக்க இந்த நகரத்தை நம்முன்னோர் கட்டிக் காத்து இன்றைய தலை முறையினருக்கு விட்டு வைத்துள்ளனர். நானும் என்னுடன் உள்ள பள்ளி வாசல் காப்பாளர்களும் முதியவர்களாகவும், அனுவபம் மிக்கவர்களாகவும் இருந்து கொண்டிருக்கின்றோம். இன்னும் சொற்ப காலத்தில் நாங்கள் மரணித்து விடுவோம். நமது சிறப்பு மிக்க பள்ளிவாசல் இன்று உலகு எங்கும் இன்ரநெட்டில் காட்டப்பட்டுள்ளது. இலங்கையில் பல இடங்களில் நமது பள்ளிவாசல்களுடன் வேலை ஆரம்பித்துக் கட்டப்பட்ட பள்ளி வாசல்களை இன்னும் முடித்துக் கொள்ள முடியாமல் மக்கள் திண்டாடும் நிலையில் நமது பள்ளி நல்ல தோற்றத்தையும் நல்லை நிருவாகத்தையும் கொண்டுள்ளது. எமது மரியாதையை எல்லாம் வல்ல அல்லாஹ் பாதுகாத்துள்ளான். எம்மீது அருள் சொரிந்துள்ளான்.

நீங்கள் ஏன் சைத்தானின் வலையில் சிக்கிக் கொண்டு தத்தளிக்கின்றீர்கள். நீங்கள் பள்ளிவாசல் நிருவாகத்துக்கு வரவேண்டும் என்று இறைவனின் கட்டளை இருக்குமாயின் நிச்சயமாக வந்து விடுவீர்கள். இந்நிகழ்ச்சி பழம் நழுவிப் பாலில் விழும் நிகழ்ச்சியாகவே நடைபெறும். அதை யாராலும் தடுக்க முடியாது. அதேபோல நீங்கள் வரமுடியாது என்று இருந்தால் வரமுடியாதுதான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்வுடைய நாட்டம் வேண்டும். புனித குர்ஆனைப் புரட்டி ஆறாம் அத்தியாயத்தை எடுத்து 165 ஆவது வசனத்தை நன்கு வாசித்துப் பாருங்கள். "உங்களைச் சோதிப்பதற்காக உங்களில் சிலரை, சிலரைவிட பதவிகளில் உயர்த்தினான் " என்று கூறப்பட்டிருக்கின்றது. இப்பிரசுரத்தின் 2ஆம் பக்கம் மூன்றாம் பந்தியைப் பாருங்கள். இதன்படி நாங்கள் அல்லாஹ்வின் சோதனையில் இருந்து கொண்டிருக்கின்றோம். ஆகவே நாங்கள் அல்லாஹ்வின் மீது அசையாத நம்பிக்கையுடன் இருத்தல் வேண்டும். அல்லாஹ் நமக்கு அளித்துள்ள அருட் கொடைகளையும், மரியாதையையும், கௌரவத்தையும் நாமே பேணிப் பாதுகாக்க வேண்டும். எமது பல்லைக் குத்தி பிறரிடத்தில் முகரக் கொடுப்பது நல்லது என்று நீங்கள் கருதினாலும் எங்களால் அப்படி கருத முடியாது. நீங்கள் மடத்தனமான பல காரியங்களைச் செய்து விட்டு பாதுகாப்பு தேடியும், பறி கொடுத்த பதவி கேட்டும் எங்களிடம் ஓடி வருகிறீர்கள். அல்லாஹ் சொல்லுகின்றான், "ஒற்றுமை என்னும் கயிற்றை பலமாகப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்று. நீங்க கயிற்றையே வெட்டி பற்றவைக்கிறீங்க.

இன்று உள்ள நிலைமை இன்னும் சொற்ப காலத்தில் மாறி, இன்றிருக்கும் சகல நிருவாகமும் உங்களின் கைக்கு வந்து விடும். அப்போது நாங்கள் இப்போது கூறி வரும் விடயம் எல்லாம் உங்களின் தலையில் வந்து முடியப் போகின்றது. என்ன செய்யப் போகின்றீர்கள். ஆனால் நீங்கள் மற்ற மனிதருடன் இணைந்து பல ஆலோசனைகளையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டு அடுத்த தலைமைத்துவத்தை ஏற்க ஆயத்தமாகுதல் வேண்டும். விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, பொறுமை கட்டாயம் உங்களுக்குத் தேவை. இதையே அல்குர்ஆன் அடிக்கடி வலியுறுத்துகின்றது.

எனவே, இவற்றை நீங்கள் படித்து உங்களுக்கு விரும்பிய முடிவை நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். அது உங்களுக்குரிய சுதந்திரம். இவற்றை பொறுமையுடன் வாசித்தமைக்கு நன்றி. "யாஅல்லாஹ், எங்கள் பாவங்களை மன்னிப்பாயாக. இம்மையிலும் மறுமையிலும் ஈடேற்றம் தந்தருள்வாயாக" இவை எல்லாவற்றையும் எல்லாம் வல்ல இறைவனின் சமுகத்துக்கு சமர்ப்பித்து உங்களிடம் இருந்து விடை பெறுவது,

அல்ஹாஜ் அலியார் முஸம்மில்
மறைக்காயர், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்,
ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர், ( சிங்களம் )
அரச அனுமதி பெற்ற சத்தியப்பிரமாணஞ் செய்த மொழிபெயர்ப்பாளர்,
சிரேஷ்ட போதனாசிரியர் , மேலதிக மொழிவிருத்திப் பாடநெறி (ALIC-NIE)
போதனாசிரியர், அரச கரும மொழிகள் திணைக்களம்.
ஊடகவியலாளர், திவயின, தியதம
ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் , சாய்ந்தமருது
624, அகமது வீதி , சாய்ந்தமருது – 16, ஸ்ரீலங்கா.
தொலைபேசி தொலை நகல் 067 – 22 29558
e-mail – alhajaliyarmuzammil@yahoo.com
2004 -02-03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7.5%

1506

இலக்கம் (01)

(1) Amplifier. TOA 500 Series } 1 no.
Model A 506 M

(2) Speaker Corn unipeice — 2 nos
(3) Horn Unit 16 Ω unipeice 2 nos — (60W)
trumpet

(4) Mic Stand — 1 no

(5) Speaker (box) with Moving Transformer 2 Kms 1 no
TOA. TST-66

CWE
Sangarajas Mw.
Near Shopmu

(6) 1000W Inverter (Japan)
12V to 240V
(input 12V output 240V)

Used to run on Electronic items like Amp. CD. Fans.

(Japan)

All things are of Made in Japan

Dip. El. Engineer

Faroak Stors
Noordan
063/77470

[illegible]

Director



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE CO-OPERATIVE WHOLESALE ESTABLISHMENT
165, SRI SANGARAJA MAWATHA, COLOMBO - 10.

இணைப்பு (02)

Telephone : 434627/431007
Fax : 431007

PUBLIC ADDRESS EQUIPMENT - "UNIPEX" BRAND (JAPANESE)

| DESCRIPTION | MODEL NO. | SELLING PRICE | STOCK POSITION DATE .......... -644 | 641 | YEAR OF IMPORT |
|---|---|---|---|---|---|
| AMPLIFIERS : | | | | | |
| 1. 400W/240W | UE 240 | 68,725.00 | ...... | ...... | ...... |
| 2. 200W/120W | GE120 | 46,725.00 | ...... | ...... | ...... |
| 3. 100W/60W | GE 60 | 37,700.00 | ...... | ...... | ...... |
| 4. 50W/30W | GE 30 | 31,890.00 | ...... | ...... | ...... |
| 5. 25W/15W | UP 15A | 10,950.00 | ...... | ...... | ...... |
| | | 16,925.00 | ...... | ...... | ...... |
| 6. Switch Board | SB 10A | 9,300.00 | ...... | ...... | ...... |
| CONVERTIBLE UNITS : | | | | | |
| 7. AM Radio Tuner | CU 10R | 3,675.00 | ...... | ...... | ....... |
| 8. FM/AM Radio Tuner | CU 11R | 13,600.00 | ...... | ...... | ....... |
| 9. Wireless Tuner | CU 40A | 6,900.00 | ...... | ...... | ....... |
| 10. Wireless Tuner | CU 40B | 6,900.00 | ...... | ...... | ....... |
| 11. Auto Reverse Cassette Player | CU 20CA | 17,900.00 | ...... | ...... | ....... |
| WIRELESS SYSTEMS : | | | | | |
| 12. Wireless Pre-Amplifier | WTS 32 | 15,465.00 | ...... | ...... | ....... |
| 13. Wireless Tuner Units | SU 30A | 10,860.00 | ...... | ...... | ....... |
| | SU 30B | 10,860.00 | ...... | ...... | ....... |
| | SU 30C | 10,860.00 | ...... | ...... | ....... |
| | SU 30F | 10,860.00 | ...... | ...... | ....... |
| | SU 30I | 10,860.00 | ...... | ...... | ....... |
| | SU 30K | 10,860.00 | ...... | ...... | ....... |
| 14. Wireless Microphone hand. held | WM 30A | 11,695.00 | ...... | ...... | ....... |
| | WM 30B | 11,695.00 | ...... | ...... | ....... |
| | WM 30C | 11,695.00 | ...... | ...... | ....... |
| | WM 30F | 11,695.00 | ...... | ...... | ....... |
| | WM 30I | 11,695.00 | ...... | ...... | ....... |
| | WM 30K | 11,695.00 | ...... | ...... | ....... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| DESCRIPTION | MODEL NO: | SELLING PRICE | STOCK POSITION DATE .......... 644 | 641 | YEAR OF IMPORT |
|---|---|---|---|---|---|
| **WIDE RANGE SPEAKERS** | | | | | |
| 58. 15W | LH 15T | 12,050.00 | ....... | ...... | ........ |
| 59. 10W | LH 10T | 7,890.00 | ....... | ...... | ........ |
| 60. 5W | LH 5T | 3,455.00 | ....... | ...... | ........ |
| **PANAL SPEAKERS** | | | | | |
| 61. 10W | FR 230K | 2,850.00 | ....... | ...... | ........ |
| **SONO-COLUMN SPEAKERS** | | | | | |
| 62. | SC 5JA | 2,940.00 | ....... | ...... | ........ |
| 63. 5W | SC5J | 6,515.00 | ....... | ...... | ........ |
| 64. 10W | SC 10J | 8,795.00 | ....... | ...... | ........ |
| 65. 15W | SC 15J | 11,845.00 | ....... | ...... | ........ |
| 66. 20W | SC 40A | 23,410.00 | ....... | ...... | ........ |
| **INDOOR SPEAKERS** | | | | | |
